


**23.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகளின் தளமாக வடகிழக்கு மாநிலங்கள் உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் நம் ராணுவ படைகளின் வீரத்தை உலக நாடுகள் வெகுவாக பாராட்டி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா புகழாரம் சூட்டியுள்ளார்.

3. அறியப்படாத தலைவர்களின் பெருமைகளை மத்திய அரசு தொடர்ந்து ஆவணப்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. புதுதில்லியில் நாளை நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று புதுடெல்லி சென்றார்.

5. ஜியார்ஜியாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சித்தாந்த் பாந்தியா இணை இன்று களமிறங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகளின் தளமாக வடகிழக்கு மாநிலங்கள் உருவெடுத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் வடகிழக்கு முதலீட்டாளர்கள் எழுச்சி உச்சிமாநாட்டை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், இப்பிராந்தியத்தில் பல்வேறு துறைகளில் உள்ள வாய்ப்புகள் கண்டறியப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இந்தியாவின் பன்முகத்தன்மையே வடகிழக்கின் வலிமை என்றும் அவர் எடுத்துரைத்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா உருவாக வடகிழக்கு மாநிலங்கள் மேம்பட வேண்டியது மிகவும் அவசியம் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத் தன்மை கொள்கைளை தமது அரசு பின்பற்றுவதாக கூறிய பிரதமர், ஆளுமை, செயலாக்கம், வலிமை, மாற்றத்தின் அடையாளமாக வடகிழக்கு மாநிலங்கள் திகழ்கிறது என்றார்.

இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்த அனைத்து அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளை பிரதமர் பாராட்டினார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் பேசிய வடகிழக்கு மேம்பாட்டுத்துறைக்கான அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா, தென்கிழக்கு ஆசியாவின் சர்வதேச வழித்தடமாக வடகிழக்கு மாநிலங்கள் உருவாகும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் தலைமையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் வடகிழக்கு பிராந்தியத்தின் வளர்ச்சி முன்னெடுத்து செல்லப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>அமித்ஷா</u>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலமான இந்தியாவின் பதிலடியில், ராணுவ படைகளின் வீரத்தையும், துணிச்சலையும் உலக நாடுகள் வெகுவாக பாராட்டி வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் எல்லை பாதுகாப்பு படையினர் விழாவில் இன்று உரையாற்றிய அவர், ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் தொடங்கிய சில நிமிடங்களிலேயே பாகிஸ்தானின் 9 தீவிரவாத மறைவிடங்கள் தகர்க்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

பிரதமரின் வலுவான அரசியல் சாதுரியம், புலனாய்வு முகமைகளின் துல்லிய தகவல்கள், முப்படைகளின் அதிரடி ராணுவ நடவடிக்கைகள் ஆகிய மூன்றும் இணைந்தது தான் ஆபரேஷன் சிந்தூர் எனவும் அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

2014-ம் ஆண்டு பிரதமராக திரு. நரேந்திரமோடி பதவியேற்றபின்னர், யூரியில் நமது வீரர்கள் மீது நடைபெற்ற தாக்குதலுக்கு துல்லிய தாக்குதல் முறையில் நமது ராணுவம் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டதை அவர் நினைவுகூர்ந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>விக்ரம் மிஸ்ரி</u>

தீவிராவதத்திற்கு எதிரான இந்தியாவின் வலுவான நடவடிக்கை குறித்து மத்திய வெளியுறவு செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, அரசியல் கட்சி பிரதிநிதிகளிடையே இன்றுமாலை எடுத்துரைக்கிறார்

பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பைஜியந்த் பாண்டா, காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசிதரூர், தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் திருமதி. சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர் நாளை உலக நாடுகளுக்கு பயணிக்கவுள்ள நிலையில்
திரு. மிஸ்ரி அவர்களிடையே உரையாற்றுகிறார்.

மொத்தமுள்ள 7 குழுக்களில், ஏற்கனவே மூன்று குழுக்கள் புறப்பட்டு சென்றுள்ள நிலையில் நாளை இம்மூன்று குழுவினரும், நாளைமறுநாள் பி.ஜே.பி. உறுப்பினர் திரு.ரவிசங்கர் தலைமையிலான மற்றொரு குழுவும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து உலகநாடுகளிடம் எடுத்துரைக்கவுள்ளது.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் தேச ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் அனைத்து கட்சி பிரதிநிதி குழுவினர் தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை எடுத்துரைப்பதற்காக சொல்வது தேச ஒற்றுமையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

<u>அக்னிவீர்</u>

நாடுமுழுவதும் கடந்த 2 ஆண்டுகளாக அக்னிபாத் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 ஆயிரம் அக்னி வீரர்கள் ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை முன்னின்று வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

20 வயது பிரிவினராக இந்த அக்னி வீரர்கள் பாகிஸ்தானின் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை தடுத்து இந்தியாவின் ராணுவ தளங்களை சிறப்பாக பாதுகாத்துள்ளனர்.

தீவிரவாதத்திற்கு ஆதரவாக செயல்பட்ட பாகிஸ்தானிற்கு எதிராக அக்னிபாத் திட்டத்தில் இணைந்த இளம்வீரர்கள் 4 நாட்களாக தொடர்ந்து தக்க பதிலடி கொடுத்துள்ளனர்.

வான் பாதுகாப்பு படை பிரிவில் 200 அக்னி வீரர்கள் பங்கேற்று, பாகிஸ்தானுக்கு உரிய பதிலடியை திறம்பட வழங்கியுள்ளனர்.

இந்தியாவின் துருப்பு சீட்டாக திகழ்ந்த ஆகாஷ்தீர் வான் கட்டுப்பாட்டு இயக்கத்தில் துடிப்பும், எழுச்சியும் கொண்ட அக்னி வீரர்களின் துணிச்சல்மிகு பங்களிப்பு நன்கு பயனளித்தது.

ரேடார் கருவிகளை இயக்கியதுடன் பெச்சோரா, ஷ்கில்கா, ஸ்ட்ரெலா, துங்குஸ்கா, **O.S.A. - A.K.** ஏவுகணைகளையும், நிலத்திலிருந்து வான்நோக்கி தாக்கும் ஏவுகணை கட்டமைப்பையும் இளம் அக்னிவீரர்கள் மிகச்சிறப்பாக கையாண்டுள்ளனர்.

தொலைத்தொடர்பு இணையதள சேவையை திறமையாக கையாண்டு ஆகாஷ் உள்ளிட்ட நவீன ஏவுகணைகளை இயக்கியதில் இவ்வீரர்கள் மகத்தான பங்காற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

<u>நக்சலைட்</u>

சட்டீஸ்கட் மாநிலம் சுக்மா மாவட்டம் கிஸ்தாராம் பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும், நக்சல் தீவரவாதிகளுக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்றுவரும் மோதலில் நக்சலைட் ஒருவர் உயிரிழந்தார்.

நக்சலைட் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மாவட்ட ரிசர்வ் காவல்படை அதிரடி படையினர் மத்திய ரிசர்வ் காவல்படையின் கோப்ரா பெட்டாலியன் பிரிவு இணைந்து மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது இந்த சம்பவம் நேரிட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

எல். முருகன்

நாட்டில் அறியப்படாத தலைவர்களின் பெருமைகள் குறித்து பொதுமக்களிடத்தில் ஆவணப்படுத்தும் பணிகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் ஆயிரத்து 350வது சதயவிழாவையொட்டி, திருச்சியில் அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவ சிலைக்கு, இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

முத்தரையர் நினைவு தபால்தலை அடுத்த ஆண்டு வெளியிடப்படும் என்று உறுதியளித்த அவர், தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் ஆட்சியமைக்கும் போது பேரரசர் முத்தரையருக்கு புகழ்சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், மஹாராஷ்டிர ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோரும் முத்தரையர் சிலைக்கு மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதனிடையே திருச்சி ஒத்தக்கடையில் உள்ள முத்தரையர் திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் உள்ளிட்டோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖

நிதி ஆயோக்

பிரதமர் தலைமையில்நாளை நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று புதுதில்லி சென்றுள்ளார்.

மாநிலத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் நிலுவையில் உள்ள நிதிசார்ந்த கோரிக்கைகளை மத்திய அரசிடம் அவர் வலியுறுத்துவார் என தெரிகிறது

அனைத்து மாநில முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

பொதுமக்களின் நலன் கருதி தங்க நகை கடனுக்கான நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி திரும்பப் பெற வேண்டுமென்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் புதிய நிபந்தனைகளால் அவசர தேவைக்கு சொந்த நகைகளின் மீது கடன்பெறுவதில் ஏழை எளிய நடுத்தர மக்கள், விவசாயிகள் பாதிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பள்ளிகள் திறப்பு

தமிழ்நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் தணிந்துள்ள நிலையில் திட்டமிட்டபடி வரும் 2-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

அன்றைய தினமே மாணாக்கருக்கு பாட புத்தகங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவும், உரிய முன்னேற்பாடுகளை அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்களும் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

ஏற்காடு

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை மாநில அமைச்சர்கள் திரு. **MRK** பன்னீர்செல்வம், திரு.ராஜகண்ணப்பன், திரு.ராஜேந்திரன் ஆகியோர் இன்றுமாலை தொடங்கி வைக்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65-வது பழக்கண்காட்சி இன்று தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

அய்யா வைகுண்டர்

கன்னியாகுமரி மாவட்டம் சாமித்தோப்பு அய்யா வைகுண்டர் தலைமை பதியில் வைகாசி பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

❖❖❖❖❖❖❖❖

குற்றாலம்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் முன்கூட்டியே பருவமழை தொடங்கியுள்ள நிலையில், குற்றாலத்தில் பிரதான அருவியான மெயின் அருவி, ஐந்தருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து சீசன் தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானிலை

அரபிக்கடலில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தெற்கு கொங்கன் கடற்பகுதிக்கு அருகே வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

அடுத்த 24 மணிநேரத்தில் இது வடக்கு நோக்கி நகர்ந்து காற்றழுத்த மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

ஜியார்ஜியாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சித்தாந்த், பாந்தியா இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ராயல் சேல்ஞ்சர்ஸ் பெங்களூரு - சன் ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖